# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 150/ந/2019**

**நாள் : 10/02/2020**

**திருமதி J. சித்ரா,**
**விருதுநகர்.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**விருதுநகர் நகராட்சி,**
**விருதுநகர்.** – **எதிர் மனுதாரர்**

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் A.A- சாலை, 34–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி J. சித்ரா அவர்களின் 18.09.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 150/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி அலுவலர் அளித்த வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :–

## ஆணை

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் A.A- சாலை,, 34–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி J. சித்ரா என்பவர் தான் குடியிருக்கும் மேற்குறிப்பிட்ட முகவரியில் உள்ள வீட்டிற்கு ஆறுமாத காலத்திற்கு ரூ.3,348/– சொத்துவரி விதிப்பு செய்ததை எதிர்த்து நகராட்சிக்கு முறையாக மனு செய்தும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலையில், 189/2002 எண்ணிட்ட அசல் மனு வழக்கினை விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அவ்வழக்கில் 19.07.2004 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பினை ஏற்று 50% தள்ளுபடி செய்து சொத்துவரியினை வசூலிக்காமல் மீண்டும் 18.06.2019 நாளிட்ட நகராட்சியின் சிறப்பு அறிவிக்கையில் அரையாண்டு சொத்துவரி ரூ.5,022/– ஆக நிர்ணயம் செய்ததை எதிர்த்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த மு.வ. எண்.189/2002 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பாணையின்படி மனுதாரரின் கட்டடத்திற்கு அப்போதைய வரியான ரூ.3,348/–இல் 50% வரித் தொகையினை வரி மறுநிர்ணயம் செய்யப்படும் வரை குடியிருப்புதாரர் செலுத்த வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளதுடன் வழக்குரை கட்டடத்திற்கு நகராட்சி சட்ட விதி 9(A–இன் படி புதிய வரிவிதிப்பு செய்யவும் நீதிமன்றத் தீர்ப்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று ஆணையர் தெரிவித்துள்ளார். நீதிமன்றத் தீர்ப்பின்படி 50% சொத்துவரியினை தற்பொழுது வரை மனுதாரர் செலுத்தவில்லை என்றும் தனது அறிக்கையில்

தெரிவித்துள்ளார். தரைதளம் மற்றும் முதல் தளம் ஆகமொத்தம் 1965 சதுரடி பரப்பளவு கொண்டுள்ள மேற்படி கட்டடம் வாடகைக்கு விடப்பட்டு வாடகைப் பயன்பாட்டில் உள்ளதென்றும் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட கட்டடம் வழக்குக்கு உட்பட்டுள்ள நிலையில், 2008–2009 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டசொத்துவரி சீராய்வின்படி 20% வரி உயர்வும் அக்கட்டடத்திற்கு மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் கட்டடத்திற்கு 2008–2009–ஆம் ஆண்டிற்குரிய சொத்துவரி உயர்வு செய்யாமல் நேரடியாக 2018–2019–ஆம் ஆண்டில் சொத்துவரி பொதுச் சீராய்வின்படி உயர்த்தப்பட்டு அதற்கான அறிவிக்கை மனுதாரருக்கு வழங்கப்பட்டது என்றும் ஆணையர் குறிப்பிட்டுள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 28.11.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தான் தாக்கல் செய்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி 50% சொத்துவரியினை தன்னிடம் பெற நகராட்சி தயாராக இல்லாத நிலையிலும், நீதிமன்ற அறிவுறுத்தலின் படி அப்பொழுது புதியதாகவும் சொத்துவரி நிர்ணயம் செய்யப்படவில்லை என்று விசாரணையின் போது தெரிவித்தார். எனவே, பழைய வரியில் 50% தள்ளுபடி செய்து ரூ. 1,674/– வரி நிர்ணயம் செய்ய ஆணையிடுமாறும் கேட்டுக்கொண்டார்.

4. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முறையீட்டு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட 189/2002 எண்ணிட்ட வழக்கில் 19.07.2004 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு ஆகியன கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரப்பட்டியலில் 1422 ½ சதுரடி பரப்புளவுள்ள காலிமனையில் புதியதாய் கட்டப்பட்டக் கட்டடத்திற்கு 6284 எண்ணிட்ட சொத்துவரி விதிப்பில் சொத்துவரி விதிக்கப்பட்டதாக அறிய முடிகிறது. அப்போதைய சொத்துவரியில் 50% தொகையினை நகராட்சிக்கு அவ்வீட்டின் குடியிருப்புதாரர் செலுத்தவேண்டும் என்றும் வழக்குரை கட்டடத்திற்கு பிரதிவாதியான நகராட்சி சட்டம் 9(எ) பிரிவின்படி புதிய வரி நிர்ணயம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டு 19.07.2002 நாளிட்ட தீர்ப்பு விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்றத் தீர்ப்பின்படி அப்போதைய சொத்துவரி மதிப்பீட்டில் 50% முறையீட்டு மனுதாரர் செலுத்தியதாகத் தெரியவில்லை. இந்நிலையில், நீதிமன்றத் தீர்ப்பின்படி புதிய வரியும் நிர்ணயம் செய்யப்பட்டதாகவும் தெரியவில்லை. எனவே, நீதிமன்றத் தீர்ப்பின்படி செயல்பட மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவருக்கும் அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

**2020–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 10–ஆம்** நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

13.2.2020

**பெறுநர்**

1. **திருமதி J. சித்ரா,**
   **எண்.34, A.A. சாலை, ஸ்டேட் பாங்க் காலனி அருகில்,**
   **விருதுநகர்.**

2. **நகராட்சி ஆணையாளர்,**
   **விருதுநகர் நகராட்சி, விருதுநகர்.**

**நகல்:** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**

13.2.2020

13/2/2020